IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

STC No.126/2024

Deposition of Witness PW1

Name : **மெய்யப்பன்** Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.07.2025

**சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள புள்ளியியல் அலுவலகத்தில் புள்ளியியல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 2023 ஆம் ஆண்டு நடந்த இடைத்தேர்தல் சம்பந்தமாக என்னை பறக்கும் படை குழுவில் கண்காணிப்பாளராக நியமனம் செய்திருந்தனர். 15.02.2023 அன்று என்னுடன் பறக்கும் படையில் சிறப்பு உதவி ஆய்வாளர் குழந்தைவேல் மற்றும் முதல் நிலைக் காவலர் பூமாலை, இரண்டாம் நிலை காவலர் நிரஞ்சனா ஆகியோர் பணியில் இருந்த போது ஆஜர் எதிரி சசிகுமார் திருவள்ளுவர் வீதியில் தேர்தல் பணிமனை கொடிகளுடன் அமைத்திருந்தார். அதனை நாங்கள் எடுத்து விடுமாறு அவருக்கு அறிவுறுத்தியும் அவர் எடுக்கவில்லை. இது சம்பந்தமாக 17.02.2023 அன்று நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த **புகார் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை

**மறுவிசாரணை இல்லை.**

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

STC No.126/2024

Deposition of Witness PW2

Name : **பூமாலை** Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.07.2025

**சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பவானிசாகர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 15.02.2023 அன்று இடைத்தேர்தல் பணிக்காக பறக்கும் படையில் மெய்யப்பன் என்பவருடன், நானும், காவலர் நிரஞ்சனா, தலைமை காவலர் குழந்தைவேல் ஆகியோர் பணியில் இருந்த போது ஆஜர் எதிரி தேர்தல் பணிமனை அமைத்திருந்தார் அதை அகற்றச் சொல்லி சொன்ன போது அவர் அதை அகற்றவில்லை. பிறகு கண்காணிப்பாளர் மெய்யப்பன் ஆஜர் எதிரியிடம் எச்சரிக்கை செய்துவிட்டு காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை

**மறுவிசாரணை இல்லை.**